**THE LABOUR COURT, SALEM**
**CAMP COURT AT DHARMAPURI**
**C.P.No. 22 Of 2021**

**01.08.2025**

**RW1 –** திரு. குபேந்திரன்

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை– (மனுதாரர் தரப்பில்)**

சாட்சியம் அளிப்பதற்காக எனக்கு அதிகாரக்கடிதம் 05.06.2025 ல் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். Ex.R2 வங்கி பணபரிவர்த்தனை ஆவணத்தில் தொழிலாளியின் பெயர் மற்றும் முகவரி இல்லை என்றால் சரிதான். மொத்தமாக பணம் பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளது. இழப்பீடு கொடுத்ததாக சொல்லப்படும் அறிவிப்புத்தொகையை காசோலையாகவோ, வரைவோலையாகவோ, நேரிலோ, தபால்மூலமோ கொடுக்கவில்லை என்றால் சரிதான். Bank Transfer மூலம் கொடுக்கப்பட்டுள்ளது. Ex.R3 அறிவிப்பு கொடுத்த தேதியான 20.05.2020 அன்று தொகை கொடுக்கப்படவில்லை என்று சொன்னால் சரிதான். அது வெறும் அறிவிப்புதான்.

Ex.R4 உத்தரவு 04.07.2022 ல் பெறப்பட்ட உத்தரவு என்றால் சரிதான். Ex.R5 ஆவணத்தில் புகைப்பட நகல்தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த உத்தரவில் தொழிலாளர்கள் பிரிவு 33(2) C ன் கீழ் பரிகாரம் காணலாம் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2020 ம் ஆண்டில் எங்கள் நிறுவனத்தின் விற்பனை குறைந்துவிட்டது என்பதை காண்பிக்க நீதிமன்றத்தில ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தொழிலாளர்களின் முதுநிலை பட்டியல் தாக்கல் செய்யவில்லை என்றால் துறையிலுள்ள மொத்த தொழிலாளிகளையும் ஆட்குறைப்பு செய்ததால் முதுநிலை பட்டியல் தாக்கல் செய்யவில்லை. நான் தற்போது நிறுவனத்தில் பணியில் இருக்கிறேன் என்றால் சரிதான். மனுதாரர் கடைசியாக பெற்ற ஊதியத்தை காட்டுவதற்கான ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மனுதாரரின் விடுப்பு இருப்பு கணக்கு

பதிவேட்டையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தொழிலாளர்களின் வங்கிக்கணக்கிற்கு தொகையை பரிமாற்றம் செய்வதற்கு தொழிலாளர்கள் எங்களுக்கு சம்மத கடிதம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நாங்கள் தொழிலாளர்கள் வங்கிக்கணக்கிற்கு அனுப்பிய தொகையை தொழிலாளர்கள் எங்களுகக்கு திருப்பி அனுப்பினார்கள் என்றால் இல்லை. தொழிலாளர்கள் தொகையை எங்களுக்கு திருப்பி அனுப்பினார்கள் என்றும் நாங்கள் அதை ஏற்றுக்கொள்ளமுடியாது என்றும் திருப்பி அனுப்பிவிட்டோம் என்று சொன்னால் அதுபோல் எந்த கடிதமும் வரவில்லை. Ex.R3 ஆட்குறைப்பு அறிவிப்பின் நகல் வேறு எந்த துறைக்கும் அனுப்பப்படவில்லை என்றால் JCL அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டது.அவ்வாறு அனுப்பப்பட்டதறகான குறிப்பு ஆவணத்தில் இல்லை என்றால் சரிதான்.

20.05.2020 ல் அறிவிப்பு அனுப்பியபோது பிரிவு 2 கே ன் கீழ் தொழிற்தாவா எண்.37/2017 மனு நிலுவையில் இருந்தது என்றால் அப்போது நிலுவையில் இருந்தது தற்போது முடிந்துவிட்டது. தொழிலாளர்கள் பணிநிபந்தணைகள் தொடர்பான வழக்கு IESOA.No.1/2017 நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட மேற்படி இரு வழக்குகளிலும் தொழிலாளர்கள் ஆட்குறைப்பு சம்பந்தமாக அனுமதி பெறப்படவில்லை என்றால் சரிதான். 100 தொழிலாளர்களுக்கு குறைவாக இருந்ததால் அனுமதி பெறப்படவில்லை. எங்கள் நிறுவனத்தில் ஏப்ரல் 2019 லிருந்து ஆட்குறைப்பு செய்யப்பட்ட மே 2020 வரை எவ்வளவு தொழிலாளர்கள் பணியில் இருந்தார்கள் என்பதை காட்ட பதிவேடு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தொழிற்தகராறு சட்டத்தின் எந்த விதிமுறைகளையும் கடைபிடிக்காமல் தொழிலாளர்களை பழிவாங்கும் நோக்கில் ஆட்குறைப்பு செய்துள்ளது சட்டத்திற்கு புறம்பானது என்றால் சரியல்ல. ஆட்குறைப்புக்கு சொல்லியுள்ள காரணங்கள் எதுவும் உண்மையல்ல என்றால் கோவிட் நோய் தொற்றுதான் காரணம். இந்த

நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்த இரண்டு தொழிற்தாவாக்களில் அனுமதி பெறாமல் செய்யப்பட்ட ஆட்குறைப்பு செல்லாததால் மனுப்படியான பரிகாரம் தரப்படவேண்டும் என்றால் தவறு.

மறுவிசாரணை இல்லை.

Sd/ (M. Shanthi)
Presiding Officer,
Labour Court, Salem